மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தஞ்சை பெரிய கோயிலுக்கு எதிரில் கடைகள் கட்ட கோயில் நிலம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவிலுக்குச் சொந்தமான இடத்திலே சுற்றுலாத் துறை மூலமாக அங்கே கடைகளைக் கட்டுவதற்கு, வெளிநாட்டு, உள் நாட்டு சுற்றுலாப் பயணிகள் அங்கே அதிகமாக வருவதால், அது பற்றி மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: அவைத் தலைவர் அவர்களே, தஞ்சை நகராட்சியோ, அல்லது மற்ற வேறு அரசுத் துறையோ தான் கட்ட வேண்டும். இது நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ரோடு ஓரங்களிலுள்ள இடம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று, கட்ட வேண்டும்.

புதுக்கோட்டையில் தொலைக்காட்சி நிலையம்.

209—(* வினா எண் 9792) திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் தொலைக்காட்சி நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்போது செயல்படும்?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மின்னளவிகளின் வாங்கிய செலவை திரும்பிப் பெறும் முறை.

210—(* வினா எண் 10562) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கும்போது 'மீட்டர்கள்' இருப்பு இல்லை என்ற காரணத்தால் வாடிக்கையாளர்

1987 எப்ரல் 8]

களை மீட்டர் வாங்கிக் கொடுக்கச் செய்து, பின்னர் அதன் விலையை திருப்பிக் கொடுக்கும் முறை நடைமுறையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மின்னளவிகள் வாரியத்திடம் இருப்பு இல்லாதவிடத்து நுகர்வோர்கள் மின்னளவிகளை வாங்கிக் கொடுத்து அதற்கான செலவை வாரியத்திடமிருந்து திரும்பப் பெறும் முறை தற்போது நடைமுறையில் உள்ளது.

திரு. வே. சோ. பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையில் குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக பல மாதங்களுக்கு முன்பாக மனுக்கள் கொடுத்தும், அவற்றுக்கு இதுவரையில் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. மேலும் ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும் இதற்கான தீர்மானம் போட்டு, அதற்குரிய கட்டணங்களைக் கட்டியும், அவற்றுக்கான ஒயர்களை மாற்றுவதில் தாமதமாகிறது. இந்த வேலைகளை விரைவில் முடித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவைத் தலைவர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது ஊர் அல்லது ஒன்றியத்தைக் குறிப்பிட்டு, அங்கே இதுமாதிரி ஒரு விளக்குத் திட்டத்தில் தடையிருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்கான பரிகாரம் காணப்படும்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்.

345—(* வினா எண் 12106) திரு. கு. ரமணி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் இலாபத்தில் இயங்கி வருகிறதா ?